டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 5.06.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 32 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 288 - Madurai | Online Edition

# விசாகப்பட்டினத்தில் தேசிய கடல் உணவு ஏற்றுமதி பயிற்சி பட்டறை நடைபெறவுள்ளது

புது தில்லி, ஜூன் 4

மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகத்தின் மீன்வளத் துறை, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகம் மற்றும் ஆந்திரப் பிரதேச அரசுடன் இணைந்து, ஜூன் 5 மற்றும் 6 ஆகிய தேதிகளில் ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் தேசிய கடல் உணவு ஏற்றுமதி குறித்த இரண்டு நாள் பயிற்சி பட்டறையை நடத்தவுள்ளது. இந்தியாவின் கடல் உணவு ஏற்றுமதி கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டலை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

இந்நிகழ்ச்சியில் ஆந்திரப் பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடு, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல், மத்திய மீன் வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங், மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் கிஞ்சரப்பு ராம்மோகன் நாயுடு மற்றும் மத்திய உணவு பதப்படுத்துதல் தொழில்கள் துறை அமைச்சர் சிராக் பாஸ்வான் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். இவர்களுடன் மத்திய இணை அமைச்சர்கள் பேராசியர் எஸ்.பி.சிங் பாகெல் மற்றும் ஜார்ஜ் குரியன் ஆகியோரும் பங்கேற்கின்றனர்.

மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் உயர் அதிகாரிகள், கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம், இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆணையம், இந்தியத் தர நிர்ணய அமைவனம், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம், நபார்ட் வங்கி மற்றும் கடல்

உணவு ஏற்றுமதியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் இப்பயிற்சி பட்டறையில் கலந்து கொள்கின்றனர்.

இப்பயிற்சி பட்டறை, மாநில வாரியான ஏற்றுமதி உத்திகளைக் கண்டறிதல், கடல் உணவுகளில் மதிப்பு கூட்டுதல், தரக் கண்காணிப்பு முறைகளை மேம்படுத்துதல், புதிய தொழில் முனைவோர் மற்றும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஏற்றுமதி கட்டமைப்பில் இணைப்பது குறித்து விவாதிக்கும்.

இந்தியாவின் கடல் உணவு ஏற்றுமதி கடந்த 2025-26 நிதியாண்டில் 73,890.46 கோடி ரூபாயாக உயர்ந்து சாதனை படைத்துள்ளது. இத்துறை தற்போது 1 லட்சம் கோடி ரூபாய் ஏற்றுமதியை எட்டுவதை இலக்காகக் கொண்டுள்ளது. நாட்டின் மிகப்பெரிய மீன் உற்பத்தி மற்றும் கடல் உணவு ஏற்றுமதி மாநிலமாக விளங்கும் ஆந்திரப் பிரதேசத்தில், பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் ஒருங்கிணைந்த நீர்வாழ் உயிரின பூங்காக்கள் உள்ளிட்ட உள்கட்டமைப்புகளை நவீனப்படுத்தப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

# 49.24 இலட்சம் மதிப்பிலான 123.15 மெ.டன் நெல் விதைகளுக்கு விதை விற்பனை தடை



திருப்பூர், ஜூன் 4

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் தஞ்சை என்பது போல் தமிழ்நாட்டின் நெல் விதைகளின் களஞ்சியம் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் பகுதி ஆகும். இங்கு சுமார் 40க்கும் மேற்பட்ட விதை நெல் உற்பத்தி நிறுவனங்களும், 130க்கும் மேற்பட்ட விதை விற்பனை நிலையங்களும் செயல்பட்டு வருகிறது. மாநிலத்தின் பல்வேறு இடங்களில் விதைக்காக பயிரிடப்படும் நெல் விதைப்பண்ணைகளிலிருந்து

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

வரும் விதைகளை தாராபுரம் பகுதியில் உள்ள விதை உற்பத்தி நிறுவனங்களில் உரிய சுத்திகரிப்பு மற்றும் முறையான செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு விதை நெல்லாக விற்பனைக்கு தயாராகிறது. ஆண்டு தோறும் சுமார் 75,000 மெ.டன் நெல் விதைகள் சுத்திகரிக்கப்பட்டு தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் விதைப்புக்காக அனுப்பப்படுகிறது.

இப்பகுதியில் நிலவும் தட்பவெப்ப நிலை மற்றும் மிதமான காற்று போன்றவை விதைகள் உரிய ஈரப்பதத்தை அடை வதற்கும், விதைகள் தூற்றுவதற்கும் ஏதுவாக இயற்கையாகவே அமையப் பெற்றிருக்கிறது. எதிர் வரும் சம்பா பருவ நெல் சாகுபடிக்காக விதை நெல் உற்பத்தி தீவிரமடைந்துள்ள நிலையில் சென்னை விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு இயக்குநரின் அறிவுறுத்தலின் பேரில் சிறப்பு குழு ஆய்வு அமைக்கப்பட்டது.

04.06.26 அன்று விதை ஆய்வு துணை இயக்குநர், கோவை (பொறுப்பு) பெ.சுமதியின் தலைமையில் விதை ஆய்வாளர்கள் கோவை-1, கோவை-2, அன்னூர், உடுமலைப்பேட்டை, தாராபுரம், பவானி, ஈரோடு, கோபி, சத்தியமங்கலம் மற்றும் காங்கேயம் ஆகியோர் அடங்கிய சிறப்பு குழு, 9 விதை உற்பத்தி நிறுவனங்களில் ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வின் போது விதிமீறல் காணப்படும் 13 விதைக்குவியல்களுக்கு விதை விற்பனைத் தடை விதிக்கப்பட்டது. இதன் அளவு 123.15 மெ.டன் மற்றும் இதன் மதிப்பு ரூ.49.24 இலட்சம் ஆகும்.

இது குறித்து விதை ஆய்வுத் துணை இயக்குநர் கூறுகையில் விதை உற்பத்தியாளர்கள் மேற்கூறிய விதைச்சட்டங்களின்படி முறையான விதை உற்பத்தி மற்றும் விற்பனை மேற்கொள்ள எச்சரிக்கை விடுத்தார். மேலும், உற்பத்தியாளர்கள் உண்மை நிலை விதைகளை உற்பத்தி செய்யும் போது விதைகளை விவசாயிகளிடம் பெறப்பட்ட பட்டியல், சுத்திகரிப்பு மற்றும் உண்மை நிலை அட்டை பொருத்திய பதிவுகளை முறையாக பராமரிக்க வேண்டும். உண்மை நிலை விதைகளுக்கென்று தனியாக விதை இருப்பு பதிவேடு பராமரிக்கவும். விதைச்சட்டம் 1966, விதைக்கட்டுப்பாட்டு ஆணை 1983, விதை விதிகள் 1968 ஆகிய விதிகள் மீறுவோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## சாட் வகைகள் : ஓர் அலசல் ஆய்வு



**திராட்சை தர்பூசணி கலவை**

**தேவையான பொருட்கள்**

நறுக்கிய தர்பூசணி மற்றும் விதை நீக்கிய திராட்சை தலா ஒரு கப்

ஆரஞ்சு ஜூஸ் இரண்டு தேக்கரண்டி

பொடியாக நறுக்கிய புதினா இலைகள்

2 தேக்கரண்டி இஞ்சி துருவல் மற்றும்

இந்து உப்பு ஒரு தேக்கரண்டி

மிளகுத்தூள் ஒரு தேக்கரண்டி

**செய்முறை**

ஒரு பாத்திரத்தில் ஆரஞ்சு ஜூஸ், இஞ்சி துருவல் இந்து உப்பு, மிளகுத்தூள் சேர்த்து தண்ணீரை விடவும்.

நீளமான கிளாஸில் தர்பூசணி,திராட்சை பழங்களை கலந்து வைத்துள்ள ஜூசை மேலாக ஊற்றி புதினா இலை போட்டு பருக்கலாம்.

**பயன்பாடு**

தர்பூசணி நீர்ச்சத்து நிறைந்தது.

எனவே இழந்து போன தாதுக்களை அதாவது மினரல்களை மீட்கலாம்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

# இயற்கை விவசாயம் குறித்த உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி



மதுரை, ஜுன் 4

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை ATMA 2026-27 ஆம் ஆண்டு வேடர் புளியங்குளம் கிராமத்தில் இயற்கை விவசாயம் குறித்த உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி வேளாண்மை இணை இயக்குனர் முருகேசன் தலைமையில் நடைபெற்றது. இயற்கை விவசாயம் மண்வள பாதுகாப்பு திட்ட விழிப்புணர்வு முகாம் மற்றும் விளைநிலம் காப்போம் Khet Bachao Abhiyan கேத் பச்சோ அபியான் இயக்கத்தின் மூலம் சமச்சீரான உரப்பயன்பாட்டை மேற்கொள்வதன் மூலம் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல் மண் ஆரோக் கியத்தை மேம்படுத்துதல் குறித்து விளக்கமளித்தார். வேளாண் உதவி இயக்குனர் மண்வளம் மற்றும் சமச்சீரான உரப்பயன் பாட்டை மேற்கொள்வதன் மூலம் சாகுபடி செலவை குறைப்பது காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது பசுந்தால் உரப்பயன் பாடு குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்கள். நடமாடும் மண்பரிசோதனை நிலையத்திலிருந்து வேளாண்மை அலுவலர்கள் மண்வளம் பாதுகாப்பு குறித்தும் மண் மாதிரி எடுத்து செயல் விளக்கம் செய்து காட்டி மண்வளை அட்டை வழங்கினார்கள். அன்னவயல் காளிமுத்து இயற்கை விவசாயம் செயல்பாடு முறைகள் மண்வளம் பாதுகாப்பு பயிர் சுழற்சி முறை ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். வேடர் புளியங் குளம் மற்றும் அருகிலுள்ள கிராமங்களில் இருந்து விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். இம்மாவட்ட அளவிலான பயிற்சிக்கான ஏற்பாடுகளை தொழில்நுட்ப மேலாளர் அழகர் மற்றும் மகாலட்சுமி செய்திருந்தனர். பயிற்சி முடிவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் லதா நன்றியுரை வழங்கினார்.

# மானிய உரங்களை கட்டாயம் பிஓஎஸ் இயந்திரம் மூலம் விற்பனை செய்ய வேண்டும்

## வேளாண் துறை அறிவுரை



பெரம்பலூர், ஜூன் 4

பெரம்பலூர் மாவட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் பாபுவின் அறிவுரையின்படி பெரம்பலூர் வட்டாரத்தில் உள்ள உரம் விற்பனை நிலையத்தை வேளாண்மை உதவி இயக்குனர் தர கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது விவசாயிகளுக்கு அனைத்து வகையான மானிய விலையில் உள்ள உரங்களை, விற்பனை செய்யும் போது கண்டிப்பாக ஆதார் கார்டு கொண்டு, பிஓஎஸ் எந்திரம் மூலம் பில் போட்ட பிறகு, கட்டாயம் விவசாயிகளின் விவரங்கள் அவருடைய தொலைபேசி எண்ணுடன் கொண்ட விற்பனை ரசீதில் இருக்க வேண்டும். உர விற்பனை நிலையங்களில் அனைத்து வகையான உரங்களை இருப்பில் வைத்திருக்க வேண்டும். விவசாயிகளுக்கு உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப்பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும். எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உரம் வைத்திருக்கும் கிடங்குகளுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்று கூறினார்.

மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக்கூடாது. அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ், டிஏபி அல்லது ட்ரிபிள் சூப்பர் பாஸ்பேட் உரங்களையும் பயன்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் கலைக்கொல்லியுடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது. விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம்.

நானோ யூரியா மற்றும் நானோ டிஏபி பயன்படுத்தவதால் மண்வளத்தை காத்து உரத்திற்கான அதிகப்படியான செலவை குறைக்கலாம் மற்றும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும், அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச்சத்து உரங்கள் மற்றும் பசுந்தால் பயிர்களை பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.



# தலைவாசல் அருகே 'கேத் பச்சா அபியான்' முகாமில் இயற்கை விவசாயம் குறித்து விளக்கம்




சேலம், ஜூன் 4

சேலம் மாவட்டம், தலைவாசல், வட்டார வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில், Khet Bacha Abhiyan (வயல் பாதுகாப்பு இயக்கம்) விழிப்புணர்வு முகாம்கள் வெள்ளையூர், நத்தக்கரை மற்றும் மணிவிழுந்தான் ஆகிய கிராமங்களில் சிறப்பாக நடைபெற்றன.

இம்முகாமிற்கு வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன் தலைமை தாங்கினார். துணை வேளாண்மை அலுவலர் மணவழகன் முன்னிலை வகித்து, விவசாயிகளுக்குத் தேவையான அரசின் பல்வேறு வேளாண் திட்டங்கள், மானியங்கள் மற்றும் அதன் பலன்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

தொடர்ந்து முகாமில், ரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்து நிலத்தின் வளத்தைப் பாதுகாக்கும் இயற்கை விவசாய முறைகள் மற்றும் மண்ணின் தேவைக்கேற்ப சரியான விகிதத்தில் உரமிடும் சமச்சீர் உர மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு எளிய முறையில் ஆலோசனைகளும் விளக்கங்களும் அளிக்கப்பட்டன. மேலும், இம்முகாமில் கலந்து கொண்ட அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள், அரசின் நலத்திட்டங்களைப் பெற ஏதுவாக தங்களது விவசாய அடையாள அட்டையினை (Farmer ID) மிகுந்த ஆர்வத்துடன் பதிவு செய்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான முழு ஏற்பாடுகளையும் உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் ஆத்மா (ATMA) திட்ட அலுவலர்கள் இணைந்து செய்திருந்தனர். இம்முகாம் கிராமப்புற விவசாயி களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

# பஞ்சகவ்யா தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம்




கடலூர், ஜூன் 4

அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் புல இறுதியாண்டு மாணவரும், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டம் - 2 (RAWE) மாணவருமான நிதிஷ் குமார் க., "பஞ்சகவ்யா தயாரிப்பு மற்றும் பயன்பாடு" என்ற தலைப்பில் விவசாயிகளுக்கு செயல்முறை விளக்க நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினார்.

இந்நிகழ்ச்சி, வேளாண் விரிவாக்கத் துறை பேராசிரியரும் தலைவருமான முனைவர் G.தமிழ்செல்வி & வேளாண் விரிவாக்கத் துறை பேராசிரியர் முனைவர் J.மீனாம்பிகை வழிகாட்டுதலிலும் நடைபெற்றது.

செயல்விளக்கத்தின் போது, பஞ்சகவ்யாவின் தயாரிப்பு முறை, பயன்பாட்டு அளவு, பயிர் வளர்ச்சியில் ஏற்படும் நன்மைகள் மற்றும் இயற்கை விவசாயத்தில் அதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. பஞ்சகவ்யா தாவர வளர்ச்சியை ஊக்குவித்து, நோய் எதிர்ப்பு திறனை மேம்படுத்தும் இயற்கை உயிர் ஊக்கியாக கருதப்படுகிறது. செயல்விளக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டோர் ஆர்வமுடன் கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

தகவல் : நிதிஷ் குமார் க, IV ஆண்டு இளங்கலை வேளாண்மை, வேளாண் புலம், அண்ணாமலை பல்கலைக்கழகம்.



# மரவள்ளி பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி

ஈரோடு, ஜூன் 4

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரத்தில் வேளாண்மை – உழவர் நலத்துறையின் மூலம் அட்மா திட்டத்தின் கீழ் கஸ்பாபேட்டை கிராமத்தில் உள் மாவட்ட அளவில் மரவள்ளி பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை என்ற தலைப்பில் 40 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.



க.பிரசாத், வேளாண்மை உதவி இயக்குநர், மொடக்குறிச்சி, தலைமை தாங்கி உயிர் உரங்களின் பயன்கள் மற்றும் நுண்ணீர் பாசனம் குறித்து தெளிவாக எடுத்துரைத்தார். பச்சியப்பன், தோட்டக்கலைத் துறை வல்லுநர், வேளாண்மை அறிவியல் நிலையம், கோபி, மரவள்ளி பயிர் வயலாய்வு மேற் கொண்டு பயிரைத் தாக்கும் பூச்சிகள், நோய்கள் கட்டுப்படுத்தும் முறைகள் மற்றும் உர மேலாண்மை பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். நந்தகுமார், துணை வேளாண்மை அலுவலர், மொடக்குறிச்சி வேளாண்மை உழவர் நலத்துறை மானியத் திட்டங்கள் குறித்து விளக்கினார். கனிமொழி, தோட்டக்கலை அலுவலர், மொடக்குறிச்சி, தோட்டக் கலை மானியத் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். அ.பிரதீப் குமார், வட்டார தொழில்நுட்ப மேலாளர், மொடக்குறிச்சி, உழவன் செயலி மற்றும் இநாம் குறித்தும் பதிவு செய்யும் முறைகள் பற்றி கூறினார். பொ.லட்சுமி, உதவி தொழில்நுட்ப மேலாளர், விவசாய அடையாள எண் பதிவு செய்தல் குறித்து கூறினார். விஜயகுமார், உதவி தொழில்நுட்ப மேலாளர், மொடக்குறிச்சி நன்றியுரை கூறினார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# உலக சுற்றுச்சூழல் தினம் இன்று!



ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5ஆம் தேதி 'உலக சுற்றுச்சூழல் தினம்' (WORLD ENVIRONMENT DAY) நாடெங்கும் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த தினம் ஐ.நா. சபையால் 1972 முதல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் சவால் குறித்து உலக மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இதனுடைய முக்கிய நோக்கமாகும்.

நாம் வாழும் பூமியின் காலம் வேகமாக கழிந்து வருகிறது. ஒரு புறம் வனங்கள் அழிப்பு, பிளாஸ்டிக் மாசுபாடு, மறுபுறம் காலநிலை மாற்றம் பல்லுயிர் அழிவு, ஆகிய வகை இயற்கையின் சமநிலைக்கு அச்சுறுத்தலாக உள்ளது. இவற்றின் முக்கிய காரணிகளை பார்ப்போம்.

**1) காலநிலை மாற்றம்**

புவிவெப்ப மாயமாதல், வெப்ப நிலை அதிகரித்தல், பருவம் தவறி மழை, வறட்சி, வெள்ளம் போன்ற நிகழ்வுகளால் மனித வாழ்க்கைக்கும் பொருளாதாரத்திற்கும் பெரிதும் அச்சுறுத்தலாக உள்ளன.

**2) மாசுபாடு**

மண் நீர் காற்று மாசுபாடு மனித ஆரோக்கியத்தை பெரிதும் பாதிக்கின்றன. குறிப்பாக காற்று மாசுபட்டால் பெரு நகரங்களில் மக்கள் சுவாசிக்க முடியாமல் கஷ்டப்படுவதை நாம் கண்கூடாக காண்கிறோம்.

**3) பல்லுயர் அழிவு**

காடுகள் வனங்கள் அழிக்கப்படுவதால் அதில் வாழும் ஏகப்பட்ட உயிரினங்கள் தாவர இனங்கள் அழிக்கப்படு கின்றன. இதனால் இயற்கையான உணவு சங்கிலி பாதிக்கப் படுகிறது.

**இந்த ஆண்டிற்கான மைய கருத்து என்ன?**

'நமது பூமி நமது கையில்' என்ற கருத்தை மையமாக கொண்டு நாம் சுற்றுப்புற சூழலுக்கு பங்களிப்பாக கீழ்க்கண்ட வற்றை மேற்கொள்ள வேண்டும்.

1) மரம் நடுதல் (TREE PLANTING)

2) ஆற்றல் சேமிப்பு (ENERGY SAVING)

3) மறு சுழற்சி (RECYCLING)

இவ்வாறாக செய்தால் வருங்கால சந்ததியினருக்கு வளமான நலமான பூமியை தரலாம்.

என்ன நீங்க ரெடியா?.....

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# அட்மா திட்டத்தின் கீழ் பண்ணைப்பள்ளி மற்றும் விவசாய நிலத்தை பாதுகாத்தல் குறித்த விவசாயிகள் பயிற்சி



அரியலூர், ஜூன் 4

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரம், வேளாண்மைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் அட்மா திட்டத்தில் விவசாயிகளுக்கு இருகையூர் கிராமத்தில் எண்ணைய்வித்து பயிர்களின் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள் குறித்த பண்ணைப்பள்ளி பயிற்சி வகுப்பு நடைப்பெற்றது.

இப்பயிற்சியில் துணை வேளாண்மை அலுவலர் ராஜதுரை, பங்கேற்று பேசுகையில் எண்ணெய்வித்துப் பயிர்களில் ஒருங் கிணைந்த உர நிர்வாகத்தை கடைப்பிடித்து குறைந்த செலவில் அதிக விளைச்சலை பெறும் வழிமுறைகள் குறித்து எடுத்துக் கூறினார். மேலும் வேளாண்மை துறைகளில் செயல்படுத்தப் படும் திட்டங்கள் குறித்தும் எடுத்து கூறினார். விவசாயிகள் அனைவரும் வேளாண்மைத்துறை மற்றும் சகோதர துறைகளின் திட்டங்களைப் பெற விவசாயிகள் தனித்துவ அடையாள எண் பெற வேண்டியது அவசியம் என கூறினார்.

கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் ராஜ்கலா கலந்து கொண்டு விவசாயிகளிடத்தில் சிறப்புரை ஆற்றி பேசுகையில், எண்ணைய் வித்துப்பயிர்களில் விதை நேர்த்தி செய்வதின் அவசியம் குறித்தும் ஒருங்கிணைந்த முறையில் உர நிர்வாக முறையினை பின்பற்றி மண்வளம் மற்றும் உடல் நலத்தை பாதுகாக்கலாம் என விதைப்பு முதல் அறுவடை வரை உள்ள சாகுபடி தொழில்நுட்பங்களை விரிவாக எடுத்து கூறினார். இப்பண்ணைப்பள்ளி பயிற்சி வகுப்புடன் விவசாய நிலத்தை பாதுகாப்பு இயக்கம் குறித்த விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது.

இம்முகாமில் கோடை உழவு, பஞ்சகாவியா தயாரித்தல் ஜீவாமிர்தம், மீன் அமிலம் இவற்றின் பயன்கள் குறித்தும்

இயற்கை வேளாண்மை மற்றும், மண்பரிசோதனை செய்து உரமிடுதல், பசுந்தாள் உரப்பயிர்கள் மற்றும் உயிர் உரங்களை பயன்படுத்தும் போது 25 சதவீதம் இரசாயன உர பயன்பாட்டை குறைத்து மண்வளத்தை மேம்படுத்தலாம் என்று விரிவாக விளக்கி கூறினார். முன்னதாக அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் சகாதேவன் வரவேற்று பேசுகையில் அட்மா திட்டங்கள் குறித்து எடுத்துக்கூறினார். இப்பயிற்சியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் லெட்சுமி மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் சரத்குமார் மற்றும் இருகையூர் கிராம விவசாய பெருமக்கள் கலந்துக் கொண்டனர்.



# இப்கோ தலைவர் தலைமையிலான முக்கிய உரையாடலால் இந்தியா-அமெரிக்க வேளாண் ஒத்துழைப்புக்கு புதிய உத்வேகம்

புது தில்லி, ஜுன் 4

வாஷிங்டன் டி.சி.யை தலைமையிடமாகக் கொண்ட அமெரிக்கா-இந்தியா வணிகக் கவுன்சில் (USIBC), இப்கோ தலைவர் திலீப் சங்காணி தலைமையிலான PHDCCI பிரதிநிதிக் குழுவை வரவேற்றது. USIBC, இந்த சந்திப்பின் முக்கியத் துவத்தையும் அதன் எதிர்கால தாக்கத்தையும் வலியுறுத்தி, தனது அதிகாரப்பூர்வ சமூக ஊடகத்தளங்களில் இந்த நிகழ்வை சிறப்பாக முன்னிலைப்படுத்தியுள்ளது.



திலீப் சங்காணி தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில், இரு நாடுகளுக்கும் இடையிலான வேளாண் துறையில் மேம்பட்ட ஒத்துழைப்புக்கான பாதையை உருவாக்கிய துடன், பொதுவான சவால்களுக்கு தீர்வுகளை கண்டறியவும் புதிய வாய்ப்புகளை ஆராயவும் உதவும் என USIBC குறிப்பிட்டது. மேலும், புதுமை சார்ந்த வேளாண் கொள்கைகள், நிலையான வேளாண் வளர்ச்சி, உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாயிகளின் செழிப்பு போன்ற துறைகளில் இந்தியா-அமெரிக்க கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவது முக்கியம் என்றும் கவுன்சில் வலியுறுத்தியது.

இக்கூட்டத்தில், வேளாண் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல், நவீன வேளாண் தொழில்நுட்பங்களை ஊக்குவித்தல், மண் வளத்தை மேம்படுத்துதல், விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆதரவு வழங்குதல், புதுமை சார்ந்த வேளாண் தீர்வுகளை

உருவாக்குதல் மற்றும் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை வலுப்படுத்துதல் போன்ற பல்வேறு விசயங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. இரு நாடுகளின் வேளாண் நிபுணர்கள், கொள்கை வடிவமைப்பாளர்கள் மற்றும் தொழில்துறை பிரதிநிதிகள், இந்தியா–அமெரிக்க ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது வேளாண் துறையில் புதிய வாய்ப்புகளை உருவாக்கும் என்றும், நீண்ட கால அடிப்படையில் விவசாயிகளுக்கு பலனளிக்கும் என்றும் ஒருமித்த கருத்தை தெரிவித்தனர்.

திலீப் சங்காணி தலைமையிலான இந்த உரையாடல், இந்தியா – அமெரிக்க வேளாண் கூட்டாண்மையை முன்னேற்றும் முக்கிய மானபடியாகவும், உலகளவில் கூட்டுறவு சார்ந்த வேளாண் வளர்ச்சியை ஊக்குவிப்பதாகவும், விவசாயிகளின் வருமானம், உற்பத்தித் திறன் மற்றும் வேளாண் பாதுகாப்பை வலுப்படுத்து வதாகவும் கருதப்படுகிறது.

# விளைநிலம் காப்போம் இயக்க திட்ட முகாம் நடந்தது




ராணிப்பேட்டை, ஜூன் 4

ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு வட்டம், லாடவரம் கிராமத்தில் நடைபெற்ற விளைநிலம் காப்போம் இயக்கம் திட்டத்தினை வேளாண்மை இணை இயக்குனர் சுந்தரம் முன்னிலையில் நடைபெற்றது. இதில் விவசாயிகள், பசுந்தாள் உர பயிர்களை பயிரிட்டு மண்ணைக் காக்க அங்கக வேளாண்மை சாகுபடி செய்வதில் விவசாயிகள் முன் வர வேண்டும். இந்தியாவில் சுமார் 25% அங்கக வேளாண்மைக்கு பயன்படுத்த வேண்டும் என்று கூறினார். பின்னர் ஆற்காடு வேளாண்மை உதவி இயக்குனர் சூரியநாராயணன் தலைமை தாங்கி வேளாண் திட்டங்கள் குறித்தும், நடவு முறை துவரை சாகுபடி செய்வது குறித்து மண் மேலாண்மை, உர மேலாண்மை, நாற்றங்கால் தயாரித்தல், விதை நேர்த்தி செய்வது குறித்தும், களை மேலாண்மை, துவரையில் நுனி கிள்ளி விடுதல், ஜிங்சல்பேட் உரமிடுதல் போன்ற தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். பின்னர் வேளாண்மை அலுவலர் ஆனந்தன் கலந்து கொண்டு மத்திய மற்றும் மாநில வேளாண் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். இப்பயிற்சியில் ஆத்மா திட்ட அலுவலர்கள் ராஜேஷ், சக்திவேல் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் வையா புரி கலந்து கொண்டு சிறப்பு ஏற்பாட்டினை செய்தனர். இதில் 50க் கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.


# விதைப்பண்ணைகளில் பசுந்தாள் உரங்களின் முக்கிய பங்கு – ஒரு பார்வை



திருச்சி, ஜூன் 4

திருச்சி மாவட்டத்தில் உள்ள விதை உற்பத்தி யாளர்கள் தரமான விதை உற்பத்தி செய்ய தங்கள் வயலில் மண்வளத்தை மேம் படுத்த பசுந்தாள் உரங்களை பயிரிடுமாறு திருச்சிராப் பள்ளி விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர், பா.நளினி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியிருப்பதாவது : மண்வளத்தை மேம்படுத்திட உயிர் உரங்கள் மற்றும் உயிர்ம இடுபொருட்களின் பங்கு இன்றியமையாததாகும். தற்போது தொழுஉரம் அதிகமாக கிடைக்காத நிலையில் பசுந்தாள் உர பயிர்களை பயிரிடுவது முக்கியமானது. இவைமண் அரிப்பை தடுப்பதுடன், மண்ணில் தழை சத்தினையும், ஊட்டச்சத்தினையும் நிலைநிறுத்துகின்றன. சணப்பு, தக்கைப்பூண்டு, அகத்தி போன்ற பசுந்தாள் உரப் பயிர்களை, பயிர் சாகுபடி இல்லாத தருணத்தில், மழையை பயன்படுத்தி ஏக்கருக்கு 15 முதல் 20 கிலோ என்ற விதை யளவை பயன்படுத்தி விதைத்து, நன்கு வளர்த்து, பூக்கும் தருணத்தில் மடக்கி உழுவதன் மூலம் நிலத்தின் வளம் மேம் படுகிறது. களர் மற்றும் உவர் நிலங்களை மேம்படுத்து வதற்கு தக்கைப்பூண்டு பசுந்தாள் பயிரிட்டு மடக்கி உழுவது சாலச் சிறந்த தாகும். அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் ‘மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்” திட்டத்தின் கீழ் பசுந் தாளுர விதைகள் விநியோகம் செய்யப்படுகிறது. பசுந்தாள் உரம் பயிரிட்டு உழ இயலாத விவசாயிகள் பசுந்தழைகளான புங்கம், வேம்பு, எருக்கு, ஆவாரை, பூவரசு இலைகளை வெட்டி எடுத்து வந்து, வயலில் இட்டு உழுது மக்க வைத்து பின் பயிர் செய்–யலாம். இவ்வாறு பசுந்தாள் உரப் பயிர்களை சாகுபடி செய்து மண்வளத்தை மேம்படுத்துவதன் மூலம் பயிருக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை தருவதுடன் மண்ணில் வாழும் நுண்ணுயிர் களுக்கும் உணவளிப்பதால் நல்ல மகசூல் மற்றும் தரமான விதைகளை உற்பத்தி செய்யலாம் என்று தெரிவித்துள்ளார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் சமச்சீர் உரப்பயன்பாடு குறித்த விழிப்புணர்வு முகாம் [Khet Bachao Abhiyan]



புதுக்கோட்டை, ஜூன் 4

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம் புதுதில்லியின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் இயங்கி வரும் வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பாக இந்திய அளவிலான வேளாண் விளை நிலங்களைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வு முகாம் (கேத் பச்சாவ் அபியான் - Khet Bachao Abhiyan) ஜூன் 1 முதல் 30 வரை நடைபெறுகிறது. இத்திட்டத்தின் அறிமுக விழா மற்றும் விழிப்புணர்வு பயிற்சி முகாம் வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 01.06.26 திங்கட்கிழமை அன்று நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு பயிற்சியை, வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர்ம.தமிழ்ச்செல்வன் தலைமையேற்று இத்திட்டத்தின் நோக்கம், மண்வளத்தின் முக்கியத்துவம் மற்றும் இயற்கை உரங்களை பயன்படுத்தி மண்வளத்தை பாதுகாத்தல், பயறு வகைகள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடிக்கு சமச்சீர் உரப் பயன்பாட்டின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். இந்நிலையத்தின் மண்ணியல் துறை தொழில் நுட்ப வல்லுனர் முனைவர் ஜெ.பாலமுருகன் பயிர் வளர்ச்சிக்கு தேவையான முக்கிய ஊட்டச்சத்துக்கள், பண்ணைக் கழிவுகளை பயன்படுத்தி இடுபொருட்கள் தயாரித்தல் மற்றும் பயிர் வளர்ச்சியில் அவற்றின் பங்குகள், மண்ணில் அங்கக உரங் களின் செயல்பாடுகள் குறித்து தொழில்நுட்ப உரை ஆற்றினார்.

இந்நிலையத்தின், உழவியல் தொழில்நுட்ப வல்லுனர் க.பி.செந்தில்குமார் பயிர் வளர்ச்சிக்கு பசுந்தாள் உரங்களின் முக்கியத்துவம் மற்றும் அதன் பங்குகள் குறித்தும் தொழில்நுட்ப

விளக்கம் அளித்தார். மேலும், இப்பயிற்சியில், புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் செல்வி (மாநிலத் திட்டம்) கலந்து கொண்டு வேளாண் மற்றும் உழவர் நலத் துறையில் உள்ள திட்டங்கள் மற்றும் இயற்கை இடுபொருட்கள் முக்கியத்துவம் குறித்தும், திருவரங்குளம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வெற்றிவேல் சமச்சீர் உரப் பயன்பாடு மற்றும் நடவு வயல்களில் இடும் முறைகள் குறித்தும் விளக்கம் அளித்தனர். இப்பயிற்சியில், வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். இந்தப் பயிற்சியில் புதுக்கோட்டை மாவட்டச் சார்ந்த 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு, வம்பன் வேளாண்மை அறிவியல் நிலைய பண்ணையில் இயற்கை முறையில் சாகுபடி செய்யப்படும் செயல் விளக்கத்திடல்களைப் பார்வையிட்டு, பயனடைந்தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வம்பன் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட உதவியாளர் (தொழில்நுட்பம்) பி.கருப்பசாமி மற்றும் திட்ட உதவியாளர் (கணினி) தே.அமுல்ராஜ் ஆகியோர் செய்திருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# கால்நடை வளர்ப்பில் கழிவு மேலாண்மை பயிற்சி



அரியலூர், ஜுன் 4

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டாரத்தில் கட்டையன் குடிக்காடு கிராமத்தில் வேளாண்மைத் துறையின் கீழ் இயங்கும் அட்மா திட்டத்தில் விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பில் கழிவு மேலாண்மை பயிற்சி நடத்தப்பட்டது. இந்த பயிற்சிக்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் உலகம்மை முருகக்கனி தலைமை தாங்கினார். பயிற்சியின் தொடக்கத்தில் அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார் வரவேற்று பேசினார்.

பின்னர் பேசிய மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் விவசாயிகளிடத்தில் விவசாய அடையாள எண் பெறுவதன் முக்கியத்துவத்தை பற்றியும் இதுவரை பதிவு செய்யாத விவசாயிகள் உதவி வேளாண்மை அலுவலர்கள் / உதவி தோட்டக்கலை அலுவலர்கள் / அட்மா திட்ட அலுவலர்கள் / பொது சேவை மையத்தை அணுகி பதிவு செய்து பயனடையுமாறு கேட்டுக் கொண்டார். வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சாந்தி பேசுகையில் வேளாண்மைத் துறையின் திட்டங்கள், இடுபொருட்களின் விபரம், உழவன் செயலி, பசுந்தாள் உரப் பயிர்களின் பயன்கள் மற்றும் மானிய விபரங்கள் பற்றியும் எடுத்து கூறினார்.

கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் அசோக்குமார் பேசுகையில் கால்நடை வளர்ப்பில் முக்கிய கழிவுகளான மாட்டுச்சாணம், உண்ணப்படாத தீவனம், சிறுநீர், கால்நடைகளை குளிப்பாட்ட பயன்படுத்தப்படும் நீர் ஆகியவற்றை முஷ்டியாக கையாண்டு மதிப்புமிக்க வளங்களாக மாற்றுவதே நோக்கம் என தெரிவித்தார்.

மேலும் சாணம் மற்றும் பாத்திகளை நுண்ணுயிரிகள் அல்லது மண்புழுக்களை கொண்டு மட்க செய்வதன் மூலம் ஊட்டச் சத்துகள் நிலைப் படுத்தப்பட்டு நோய்க்கிருமிகள் இல்லாத இயற்கை உரம் தயாரிக்கலாம் எனவும் சானத்தை சிதைப்பதன் மூலம் பண்ணை ஆற்றல் தேவைகளுக்கான மீத்தேன் உயிரி வாயு உற்பத்தி செய்து பயனடையலாம் எனவும் மேலும் பல நன்மைகள் குறித்தும் விளக்கி கூறினார். இப்பயிற்சியில் வேளாண் அலுவலர் சுகந்தி, உதவி வேளாண்மை அலுவலர் வெங்கடேசன், அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சிவா மற்றும் முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# அட்மா திட்டத்தின் கீழ் மானாவாரி வேளாண்மை உள் மாவட்ட விவசாயிகள் பயிற்சி



சிவகங்கை, ஜூன் 4

சிவகங்கை மாவட்டம், கண்ணங்குடி வட்டாரத்தில் விரிவாக்க சீரமைப்பு திட்டம் (SSEPERS) அட்மா திட்டத்தின் கீழ் கண்டியூர் கிராமத்தில் மானாவாரி வேளாண்மை குறித்து உள்மாவட்ட விவசாயிகள் பயிற்சி வேளாண்மை உதவி இயக்குநர் தங்கபாண்டியன், அறிவுரையின்படி வேளாண்மை அலுவலர் சிவபிரியதர்ஷினி தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் விளைநிலங்களை காப்போம் இயக்கம் குறித்து விளக்கமளித்தார்.

வேளாண்மை அறிவியல் நிலையம், உதவி பேரராசிரியர் பிரபு, கோடை உழவு செய்வதால் ஏற்படும் நன்மை குறித்தும் வறட்சியைத் தாங்கி வளர்வதற்கு விதைகளை விதைக்கும் முன் கடினப்படுத்தி விதைத்தல், நிலத்தினுள் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்கும் தொழில் நுட்பங்கள், மானாவாரி பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

மேலும் உதவி வேளாண்மை அலுவலர் நவநீத கிருஷ்ணன், விவசாய அடையாள எண், பி.எம்.கிசான் நிறைவுறல் இயக்கம் மற்றும் நடப்பு ஆண்டில் செயல்படுத்தவிருக்கும் வேளாண் விரிவாக்க திட்டங்கள், இடுபொருட்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, நுண்ணூட்ட உரம் குறித்தும் எடுத்துரைத்து பயன்படுத்தி கொள்ள அறிவுறுத்தினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் சூர்யா, அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்தும் சமச்சீர் உரமேலாண்மை பற்றி கூறினார். இப்பயிற்சியின் முடிவில் விதைநேர்த்தி செயல் விளக்கம் உதவி தொழில்நுட்ப மேலாளர் சதீஸ்குமார் செய்து காண்பித்தார்.

# நாய்கள் மற்றும் பூனைகளை தாக்கும் அக ஒட்டுண்ணிகள் அவற்றை தடுக்கும் முறைகள்

நாய் மற்றும் பூனை போன்ற செல்லப்பிராணிகள் இன்று பல குடும்பங்களின் அன்புக்குரிய உறுப்பினர்களாக மாறிவிட்டன. அவற்றின் உணவு, தடுப்பூசி, பராமரிப்பு மற்றும் வசிப்பிட வசதிகளில் உரிமையாளர்கள் அதிக அக்கறை காட்டுகின்றனர். இருப்பினும், பல நேரங்களில் கண்ணுக்குத் தெரியாமல் அவற்றின் உடலுக்குள் வாழும் ஒட்டுண்ணிகள் குறித்து போதுமான கவனம் செலுத்தப்படுவதில்லை. இந்த அக ஒட்டுண்ணிகள் செல்லப் பிராணிகளின் உடல்நலத்தை பாதிப்பதோடு மட்டுமல்லாமல், சில நேரங்களில் மனிதர்களுக்கும் நோய்களை பரப்பக்கூடியவை என்பதால் அவற்றைப் பற்றிய விழிப்புணர்வு மிகவும் அவசியமாகிறது. அக ஒட்டுண்ணிகள் என்பது விலங்குகளின் உடலுக்குள் வாழ்ந்து, அவற்றின் ஊட்டச்சத்துக்களை உறிஞ்சி வளரக்கூடிய உயிரினங்களாகும். இவை குடல், இதயம், நுரையீரல், கல்லீரல் போன்ற உறுப்புகளில் வாழ்ந்து பல்வேறு உடல்நலப் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. சில ஒட்டுண்ணிகள் மனிதர்களுக்கும் பரவக் கூடியவை என்பதால், இவை கால்நடை மருத்துவத்திலும் பொதுச் சுகாதாரத்திலும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

**அக ஒட்டுண்ணிகள் எவ்வாறு பரவுகின்றன?**

நாய்கள் மற்றும் பூனைகள் பல்வேறு வழிகளில் ஒட்டுண்ணிகளால் பாதிக்கப்படுகின்றன. மாசடைந்த மண், தண்ணீர், உணவு, பாதிக்கப்பட்ட விலங்குகளின் மலம், கொசுக்கள், தெள்ளுப் பூச்சிகள், எலிகள் மற்றும் பிற சிறிய விலங்குகள் மூலம் தொற்று ஏற்படலாம். சில ஒட்டுண்ணிகள் தாயிலிருந்து குட்டிகளுக்கு கருப்பை வழியாகவோ அல்லது பாலின் மூலமாகவோ பரவுகின்றன. வெளியில் சுற்றித் திரியும் செல்லப்பிராணிகள் மட்டுமல்லாமல், வீட்டிற்குள் மட்டுமே வளர்க்கப்படும் செல்லப்பிராணிகளுக்கும் இத்தொற்றுகள் ஏற்படலாம். எனவே ஒவ்வொரு செல்லப்பிராணி உரிமையாளரும் இதுகுறித்து விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

**நாய்கள் மற்றும் பூனைகளில் காணப்படும் முக்கிய அக ஒட்டுண்ணிகள்**

**உருளைப்புழுக்கள் – குட்டிகளின் மறைமுக எதிரி**

நாய்களில் காணப்படும் டாக்ஸோகாரா கேனிஸ் மற்றும் பூனைகளில் டாக்ஸோகாரா கேட்டி முக்கிய உருளைப்புழுக்களாகும்.

இவை குட்டி நாய்கள் மற்றும் பூனைகளில் அதிகமாகக் காணப்படுகின்றன.

உருளைப்புழுக்களால் பாதிக்கப்பட்ட செல்லப்பிராணிகளில் வயிறு வீக்கம், வாந்தி, வயிற்றுப்போக்கு, உடல் எடை குறைதல், மந்தமான வளர்ச்சி மற்றும் முடி பொலிவிழத்தல் போன்ற அறிகுறிகள் காணப்படுகின்றன. கடுமையான தொற்று ஏற்பட்டால் குடலில் அடைப்பு ஏற்பட்டு உயிருக்கு ஆபத்தாக மாறக்கூடும். இந்தப் புழுக்களின் முட்டைகள் மண்ணில் நீண்ட காலம் உயிருடன் இருப்பதால் குழந்தைகள் மாசடைந்த மண்ணுடன் தொடர்பு கொள்ளும் போது மனிதர்களுக்கும் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது.

**கொக்கிப்புழுக்கள் – இரத்தத்தை உறிஞ்சும் ஒட்டுண்ணிகள்**

அன்கைலோஸ்டோமா கேனினம், அன்கைலோஸ்டோமா டியூபிஃபார்மே மற்றும் அன்கைலோஸ்டோமா பிராசிலியன்சே போன்ற கொக்கிப்புழுக்கள் நாய்கள் மற்றும் பூனைகளில் பொதுவாகக் காணப்படுகின்றன. இவை குடலின் சுவற்றில் ஒட்டிக் கொண்டு இரத்தத்தை உறிஞ்சி வாழ்கின்றன. இந்தப் புழுக்களால் பாதிக்கப்பட்ட விலங்குகளில் இரத்தசோகை, உடல் பலவீனம், சோர்வு, இரத்தம் கலந்த வயிற்றுப்போக்கு மற்றும் உடல் எடை இழப்பு போன்ற அறிகுறிகள் காணப்படும். குட்டி விலங்குகளில் கடுமையான இரத்தசோகை ஏற்பட்டு உயிரிழப்பு கூட ஏற்படலாம்.

**சாட்டைப்புழுக்கள் – நீடித்த குடல் பாதிப்புகளுக்குக் காரணம்**

ட்ரைக்கூரிஸ் வல்பிஸ் எனப்படும் சாட்டைப்புழுக்கள் பெரும் பாலும் நாய்களின் பெருங்குடலில் வாழ்கின்றன. இவை நீண்டகால வயிற்றுப்போக்கு, பசியின்மை, உடல் எடை குறைதல் மற்றும் சோர்வு போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன. அறிகுறிகள் மெதுவாகத் தோன்றுவதால் பல உரிமையாளர்கள் ஆரம்பத்தில் இதனை கவனிக்காமல் விடுகின்றனர்.

**நாடாப்புழுக்கள்–தெள்ளுப்பூச்சிகள் மூலம் பரவும் ஒட்டுண்ணிகள்**

நாய்கள் மற்றும் பூனைகளில் அதிகம் காணப்படும் நாடாப்புழு டிபிலிடியம் கேனினம் ஆகும். இதன் பரவலுக்கு தெள்ளுப்பூச்சிகள் முக்கிய காரணமாக உள்ளன. மேலும் டீனியா பிசிஃபார்மிஸ், டீனியா டீனியேஃபார்மிஸ் மற்றும் எக்கினோகாகஸ் கிரானுலோசஸ் போன்ற நாடாப்புழுக்களும் காணப்படுகின்றன. நாடாப்புழு தொற்றின் முக்கிய அறிகுறியாக மலத்துடன் அரிசி துகள்களைப் போன்ற வெள்ளை நிறத் துண்டுகள் வெளியேறுவது குறிப்பிடத் தக்கது. சில விலங்குகளில் பின்பகுதியில் அரிப்பு ஏற்பட்டு தரையில் தேய்த்துக்கொண்டு நடப்பதையும் காணலாம்.

## ஓரணு ஒட்டுண்ணிகள்

### ஜியார்டியா

ஜியார்டியா டியோடினாலிஸ் என்பது குடலில் வாழும் ஓரணு ஒட்டுண்ணியாகும். இது மாசடைந்த குடிநீர் மற்றும் உணவின் மூலம் பரவுகிறது. பாதிக்கப்பட்ட விலங்குகளில் துர்நாற்றமுள்ள வயிற்றுப்போக்கு, உடல் எடை குறைதல், சோர்வு மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு போன்ற அறிகுறிகள் காணப்படுகின்றன.

### காக்சிடியா

சிஸ்டோஐசோஸ்போரா கேனிஸ் மற்றும் சிஸ்டோஐசோஸ்போரா பெலிஸ் போன்ற காக்கிடியா ஒட்டுண்ணிகள் குட்டி நாய்கள் மற்றும் பூனைகளில் அதிகமாகக் காணப்படுகின்றன. இவை கடுமையான வயிற்றுப்போக்கு, நீரிழப்பு மற்றும் வளர்ச்சி பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அதிக எண்ணிக்கையிலான விலங்குகள் ஒன்றாக வளர்க்கப்படும் இடங்களில் இத்தொற்று அதிகமாகக் காணப்படுகிறது.

### பூனைகளில் முக்கியத்துவம் வாய்ந்த டாக்ஸோபிளாஸ்மா

டாக்ஸோபிளாஸ்மா காண்டி என்பது பூனைகளில் காணப்படும் முக்கியமான ஒட்டுண்ணியாகும். பெரும்பாலான பூனைகளில் வெளிப்படையான அறிகுறிகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் சிலவற்றில் காய்ச்சல், பசியின்மை, கண் பாதிப்பு, சுவாசப் பிரச்சினைகள் மற்றும் நரம்பியல் கோளாறுகள் ஏற்படலாம். இந்த ஒட்டுண்ணி மனிதர்களுக்கும் பரவக்கூடியது. குறிப்பாக கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்களுக்கு இது ஆபத்தானதாக கருதப்படுகிறது.

### இதயப்புழு – உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய நோய்

டிரோஃபிலேரியா இம்மிட்டிஸ் எனப்படும் இதயப்புழு கொசுக்களின் மூலம் பரவுகிறது. இந்தப் புழுக்கள் இதயம் மற்றும் நுரையீரல் இரத்த நாளங்களில் வளர்கின்றன. பாதிக்கப்பட்ட விலங்குகளில் தொடர்ந்து இருமல், மூச்சுத்திணறல், உடற்பயிற்சியின் போது விரைவில் சோர்வடைதல் மற்றும் உடல் எடை குறைதல் போன்ற அறிகுறிகள் காணப்படுகின்றன. சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் உயிரிழப்பு ஏற்படக்கூடும்.

### செல்லப்பிராணி உரிமையாளர்கள் கவனிக்க வேண்டிய அறிகுறிகள்

அக ஒட்டுண்ணிகளால் பாதிக்கப்பட்ட உங்கள் செல்லப் பிராணியில் பின்வரும் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக கால்நடை மருத்துவரை அணுக வேண்டும்.

- அடிக்கடி வயிற்றுப்போக்கு
- வயிறு வீக்கம்
- உடல் எடை குறைதல்
- இருமல்
- வெளிறிய ஈறுகள்
- வாந்தி
- பசியின்மை
- முடி பொலிவிழத்தல்
- சோர்வு
- வளர்ச்சி தாமதம்

**நாய்கள் மற்றும் பூனைகளில் காணப்படும் முக்கிய அக ஒட்டுண்ணிகள்**






## ஒட்டுண்ணி தொற்றுகளைத் தடுக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள்

அக ஒட்டுண்ணி தொற்றுகளைத் தடுப்பதில் தடுப்பு நடவடிக்கைகளே மிக முக்கியமானவை.

### முறையான குடற்புழு நீக்கம்

குட்டி நாய்கள் மற்றும் பூனைகளுக்கு சிறு வயதிலிருந்தே கால்நடை மருத்துவர் பரிந்துரைக்கும் அட்டவணைப்படி குடற்புழு நீக்க மருந்துகள் வழங்கப்பட வேண்டும். வயது வந்த விலங்குகளுக்கும் குறிப்பிட்ட கால இடைவெளியில் குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும்.

### சுற்றுச்சூழல் சுகாதாரம்

செல்லப்பிராணிகளின் மலத்தை தினமும் அகற்ற வேண்டும். வளர்ப்பு இடங்கள், கூண்டுகள், உணவுப் பாத்திரங்கள் மற்றும் பூனை மணற்பெட்டிகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். சுத்தமான சூழல் ஒட்டுண்ணிகளின் பரவலைக் கணிசமாகக் குறைக்கிறது.

### தெள்ளுப்பூச்சி மற்றும் கொசு கட்டுப்பாடு

தெள்ளுப்பூச்சிகள் மற்றும் கொசுக்கள் பல ஒட்டுண்ணிகளின் பரவலில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே மருத்துவர் பரிந்துரைக்கும் தெள்ளுப்பூச்சி கட்டுப்பாட்டு மருந்துகள் மற்றும் கொசு தடுப்பு நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும்.

### சத்தான மற்றும் பாதுகாப்பான உணவு

சமைக்காத இறைச்சி மற்றும் மாசடைந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும். தரமான உணவு மற்றும் சுத்தமான குடிநீர் வழங்குவது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது.

### வேட்டையாடும் பழக்கத்தைக் கட்டுப்படுத்துதல்

எலிகள், பறவைகள் மற்றும் பிற சிறிய விலங்குகளை வேட்டையாடி உண்பதன் மூலம் பல ஒட்டுண்ணிகள் பரவக்கூடும். எனவே செல்லப்பிராணிகளை கட்டுப்பாட்டுடன் வளர்ப்பது அவசியம்.

### வழக்கமான மலப் பரிசோதனை

வெளிப்படையான அறிகுறிகள் இல்லாவிட்டாலும் ஆண்டிற்கு குறைந்தது ஒருமுறை மலப் பரிசோதனை செய்வது ஒட்டுண்ணிகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய உதவும்.

**கர்ப்பகால பராமரிப்பு**

கர்ப்பமான நாய்கள் மற்றும் பூனைகளுக்கு கால்நடை மருத்துவர் ஆலோசனைப்படி குடற்புழு நீக்க சிகிச்சை வழங்குவதன் மூலம் குட்டிகளுக்கு தொற்று பரவுவதைத் தடுக்கலாம்.

**மனிதர்களுக்கான பாதுகாப்பு**

சில ஒட்டுண்ணிகள் மனிதர்களுக்கும் பரவக்கூடியவை. எனவே:

- செல்லப்பிராணிகளை கையாண்ட பிறகு கைகளை சோப்பால் கழுவ வேண்டும்.
- குழந்தைகள் மண்ணில் விளையாடிய பிறகு கைகளை சுத்தம் செய்ய வேண்டும்.
- செல்லப்பிராணிகளின் மலத்தை உடனடியாக அகற்ற வேண்டும்.
- கர்ப்பிணிப் பெண்கள் பூனைகளின் மலத்தை கையாளும் போது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.
- செல்லப்பிராணிகளுக்கு முறையான குடற்புழு நீக்க சிகிச்சை வழங்க வேண்டும்.

**முடிவுரை**

நாய்கள் மற்றும் பூனைகளில் காணப்படும் உருளைப்புழுக்கள், கொக்கிப்புழுக்கள், சாட்டைப்புழுக்கள், நாடாப்புழுக்கள், ஜியார்டியா, காக்சிடியா, டாக்ஸோபிளாஸ்மா மற்றும் இதயப்புழுக்கள் போன்ற அக ஒட்டுண்ணிகள் அவற்றின் ஆரோக்கியத்தைப் பெருமளவில் பாதிக்கக்கூடியவை. சில ஒட்டுண்ணிகள் மனிதர்களுக்கும் பரவக் கூடியதால் இவை பொதுச் சுகாதார முக்கியத்துவமும் கொண்டவை. எனவே, முறையான குடற்புழு நீக்கம், சுகாதாரமான சூழல், தெள்ளுப்பூச்சி மற்றும் கொசு கட்டுப்பாடு, சத்தான உணவு, வழக்கமான கால்நடை பரிசோதனை மற்றும் பொறுப்பான செல்லப்பிராணி பராமரிப்பு ஆகியவற்றின் மூலம் இந்த ஒட்டுண்ணி தொற்றுகளை திறம்படத் தடுக்க முடியும். செல்லப்பிராணிகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது, நமது குடும்பத்தின் ஆரோக் கியத்தைப் பாதுகாப்பதற்குச் சமமானதாகும். ஆகவே ஆரோக்கிய மான செல்லப்பிராணி ஒரு மகிழ்ச்சியான குடும்பத்தின் அடையாளமாகும்.

தகவல் : ***முனைவர் தா.வே.தமிழம், கால்நடை ஒட்டுண்ணியியல் துறை மற்றும் ச. துர்கா, கால்நடை உற்பத்தி மேலாண்மை துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சேலம் – 636 112.***

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**